சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 76/2022 Date: 27.01.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி-1(Dw1) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | சாதி | : | -- |
| த/பெ | : | முருகன் | சமயம் | : | -- |
| கிராமம் | : | எரிச்சநத்தம் | தொழில் | : | |
| தாலுகா | : | சிவகாசி | வயது | : | 39 |

<u>முதல் விசாரணை-</u>

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன்.08.12.2015ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியான எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்டு பத்திரம் SRO நகல் **பி.வா.சா.ஆ.2.** 10.12.2015ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியான எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்டு பத்திரம் SRO நகல் **பி.வா.சா.ஆ.3.** 2018-2020 வரையிலான ஜவுளிக்கடை தொழில் வரி ரசீதுகள் அசல் **பி.வா.சா.ஆ.4(எண்ணம்-2).** பிராது தாவா 5ம் அயிட்ட சொத்தில் ஜவுளிக்கடை வைத்து நடத்தியதற்கான பில்கள் அடங்கிய கோர்வை அசல் **பி.வா.சா.ஆ.5(எண்ணம்-9).** பிராது தாவா 5ம் அயிட்ட சொத்தில் ஜவுளிக்கடை நடத்தி வந்ததற்கான வரவு செலவு கணக்கு நோட்டு அசல்

**பி.வா.சா.ஆ.6.** பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)